தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**ஊலக நாடுகளின் வேளாண் அரசியலை மாணவர்கள் பயில வேண்டும் – நீயா நானா கோபிநாத் பேச்சு**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், 104வது மாணவ மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவின் துவக்கவிழா இன்று (16-4-2015) பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் நீயா நானா கோபிநாத் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில் வேளாண் மாணவர்கள் சர்வதேச நாடுகளின் வேளாண் அரசியலை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் உலகின் தலைசிறந்த பண்பாடுகளுக்கு அடித்தளமிட்டது விவசாயமே என்றும், தேசத்தைச் சீர்குலைக்க கலாச்சாரம், நீராதாரம் மற்றும் மண்வளம் ஆகியவற்றின் மீது உரிய அக்கறையின்றி இருத்தலே போதுமானது என்றும் கூறினார். இந்தியாவின் ஆகப்பெரிய பிரச்சனை மண்வளத்தையும், நீராதாரத்தையும் அடியோடு புறந்தள்ளியதுதான். வேளாண் மாணவர்கள் அதன் பின் உள்ள அரசியலைப் புரிந்துகொண்டு ஆக்கப்பூர்வமான எதிர்வினையாற்றி உழவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். இதற்கு பாடத்திட்டங்களைத் தாண்டிய வாசிப்பும், சமூகத்தில் நடக்கும் சமகால நிகழ்வுகளைப் பற்றிய புரிதலும் மாணவர்களுக்கு இருக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

முன்னதாக விழாவினை தொடங்கி வைத்துப் பேசிய துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள் ஊருக்கே உணவளிக்கும் உத்தம சமுதாயமான வேளாண் சமூகமே எல்லா

கலாச்சாரத்திற்கும் அடிப்படை எனவும், கேள்வி கேட்கும் இயல்புள்ள இன்றைய மாணவ சமூகம் ஆரோக்யமானது எனவும் குறிப்பிட்டார்.

இந்த விழாவின் ஒரு பகுதியாக மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பொழில் என்னும் இதழினை திரு. கோபிநாத் அவர்கள் வெளியிட துணைவேந்தர் கு. இராமசாமி மற்றும் முனைவர் ச. மகிமைராஜா அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக 104வது மாணவர் மன்ற தலைவர் செல்வன். ச. கௌதம் அவர்கள் வரவேற்புரையும் செயலாளர் செல்வி. ர. நர்மதா தேவி அவர்கள் நன்றியுரையும் ஆற்றினார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்